பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 07 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது, மக்களவையில் பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்தார்.
2. நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு அனைத்து கட்சியினரும் அர்ப்பணிப்பு உணர்வோடு அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
3. இளங்கலை நீட் தேர்வு தொடர்பான எந்த ஒருமுடிவும் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் இன்று மக்களவையில் தெரிவித்தார்.
4. தமிழகத்தில் முதல் முறையாக ஆன்லைன் மூலம் உடனடி கட்டிட அனுமதி பெறும் திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.
5. ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி –டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்றைய ஆட்டங்களில் இலங்கை– மலேசியாவையும் பங்களாதேஷ் - தாய்லாந்தையும் எதிர்கொள்கின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது,

பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் சமர்ப்பித்தார்.

**[]<<<>>>[]**

இந்த ஆண்டு இளங்கலை நீட் தேர்வு வினாத்தாள் பாட்னா அருகே ஒரே ஒரு இடத்தில் மட்டும் முன்கூட்டியே வெளியானது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதைத் தெரிவித்த அமைச்சர், இது குறித்து சிபிஐ புலன் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும், இந்த விஷயத்தில் உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேயே எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியும் என்றும் கூறினார்.

நாட்டில் நாலாயிரத்து 700-க்கும் மேற்பட்ட மையங்களில் இந்த ஆண்டு நீட் தேர்வு நடைபெற்றது என்றும், வேறு எந்த பகுதியிலிருந்தும் முறைகேடு தொடர்பாக புகார் எதுவும் எழவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, இப்பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களவையில் இது குறித்த பிரச்சினையை காங்கிரஸ், இடதுசாரி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எழுப்ப முயன்றபோது அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அதற்கு அனுமதி மறுத்தார்.

**[]<<<>>>[]**

நாட்டின் சுதந்திர நூற்றாண்டு அமிர்தகால பயணத்தில் நாளை தாக்கல் செய்யப்படும் மத்திய பட்ஜெட் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் ஐந்தாண்டு காலத்தில் எந்த திசையில் செல்ல வேண்டும் என்பதை இந்த பட்ஜெட் முடிவு செய்யும் என்ற கூறினார்.

லட்சிய பாரத இயக்கத்தின் வலுவான அடித்தளமாகவும் இது அமையும் என்று அவர் தெரிவித்தார்.

அனைத்து கட்சிகளும் தங்களது எல்லைகளைக் கடந்து நாட்டின் நலனை சிந்தித்து அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்ய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த கூட்டத்தொடரின்போது அவை நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைக் குறிப்பிட்ட பிரதமர், எதிர்க்கட்சிகள் ஜனநாயக முறையில் தங்களது கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமென்றும், அவை நடவடிக்கைகளை முடக்கும் வகையில் செயல்படக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற முனைப்புடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

யுனஸ்கோவில் உலக புராதன அருங்காட்சியக மையத்துக்கு இந்தியா ஒரு மில்லியன் டாலர் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று உலக புராதன சின்னங்கள் தெரிவுக்குழு கூட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றிய பிரதமர், பாரம்பரிய தலங்களை பாதுகாப்பதும், அவற்றின் தரத்தை உயர்த்துவது, தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்துவது உள்ளிட்ட பணிகளுக்கு இவற்றை அந்த அமைப்பு பயன்படுத்தும் என்று கூறினார்.

இந்த நிதியைக் கொண்டு உலகின் தென்பகுதிகளில் உள்ள புராதன சின்னங்களுக்கு உயிரூட்ட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, தொன்மை சிறப்புமிக்க சின்னங்களையும் பாதுகாப்பதுதான் என்று கூறிய பிரதமர், கடந்த பத்து ஆண்டுகளில் நவீன வளர்ச்சியை எட்டுவதற்கான வழிமுறைகளை இந்தியா பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டின் பாரம்பரியத்தை காப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அரச குடும்பத்தைச் சோந்தவர்கள் மற்றும் கண்ணிணமிக்க மனிதர்களின் நினைவாக அஸ்ஸாம் மாநிலத்தில் எழுப்பப்பட்ட தொன்மை சிறப்புமிக்க மொய்டம் குன்றுகளுக்கு யுனஸ்கோவின் அங்கீகாரம் பெற பரிந்துரைக்கப்பட்டிருப்பது குறித்து திரு நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவீத்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

தமிழகத்தில் முதல் முறையாக கட்டிட அனுமதியை ஆன்லைன் மூலம், உடனடியாக வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பதாரர் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் உடனடியாக கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும், இதற்காக விண்ணப்பதாரர் எந்த அலுவலகத்திற்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

கட்டிடப் பணி நிறைவடைந்ததும், ‘முடிவுச் சான்று’ பெறவேண்டியதிலிருந்து, விலக்கு அளிக்கப்படுவதாகவும் அரசு கூறியுள்ளது.

இரண்டாயிரத்து 500 சதுரஅடி வரையுள்ள மனையில், மூவாயிரத்து 500 சதுர அடியில் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு இது பொருந்தும் என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நாலாயிரத்து 184 அடுக்குமாடி கட்டிடங்களையும் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நடப்பு கல்வி ஆண்டுக்கான பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு ஆன்லைன் மூலம் இன்று தொடங்கியது.

மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு பொன்முடி இதனை தொடங்கி வைத்தார்.

இன்று சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறுவதாக அமைச்சர் தெரிவித்தார்,

*( சவுண்ட்பைட் - பொன்முடி ) ---38 – செகண்ட்*

இந்த ஆண்டு, மாநிலம் முழுவதும் பொறியியல் படிப்புக்கு இரண்டு லட்சத்து 53 ஆயிரத்து 954 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த பத்தாம் தேதி தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், நடப்பு கல்வி ஆண்டில் இரண்டு லட்சத்து 32 ஆயிரத்து 376 இடங்களுக்கு மாணவர்களை சேர்க்க அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கவுன்சில் அனுமதி அளித்துள்ளது.

[]<<<>>>[]

2025-ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்கு வரும் செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி வரை மனுக்கள் மற்றும் பரிந்துரைகளை அனுப்பலாம் என என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவற்றை ராஷ்ட்ரீய புரஷ்கார் இணையதளத்தில் ஆன்லைன் மூலமாகவே அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

உத்தராகண்ட் மாநிலத்தில் ஹரித்வார் **Gaumukh,** கங்கோத்ரி ஆகிய இடங்களில் கங்கை புனித நீரை சேகரிப்பதற்கான கண்வர் யாத்திரை இன்று தொடங்கியது.

உத்தராகண்ட் மற்றும் உத்திரபிரதேச மாநிலங்களிலிருந்து இந்த புனித தலங்களுக்கு வரும் யாத்திரிகர்களுக்குத் தேவையான வசதியை உத்தராகண்ட் அரசு செய்துள்ளது.

இந்த ஆண்டு ஹரித்வார் மேளாவுக்கு ஐந்து கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, மாவட்ட நிர்வாகங்கள் மூலம் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டள்ளதாகவும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் போதிய அளவில் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவீத்தார்.

[]<<<>>>[]

காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 48 மணி நேரத்தில் அணையின் நீர்மட்டம் 14 அடி உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) ---42 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் பருவமழை குறைந்துள்ளபோதிலும், பலத்த சூறாவளிக் காற்று வீசி வருவதால் போக்குவரத்து மற்றும் மின் விநியோகம் சில இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றை சீர் செய்யும் பணி துரிதமாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி –டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் இலங்கை – மலேசியாவையும், பங்களாதேஷ் - தாய்லாந்தையும் எதிர்கொள்கின்றன.

தம்புலாவில் பிற்பகல் இரண்டு மணிக்கு தொடங்க உள்ள முதல் ஆட்டத்தில் இலங்கை – மலேசியாவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் திருச்சி – சேப்பாக்கம் அணியை எதிர்கொள்கிறது.

நெல்லையில் இப்போட்டி இரவு மணி 7-15-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்று வரும் உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் இந்தியா தோல்வியடைந்தது.

**[]<<<>>>[]**

ஆஸ்த்திரிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று ஸ்லோவாகியாவின் லூகாஸ் **Klein** -யை எதிர்கொள்கிறார்.

***End of News***